Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - Viii

நாதம் 15 திருவள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 11 26 -11-2004 வெள்ளிக்கிழமை ஓசை -282

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்,

அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10599)

## தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடுகள், வாழ்த்துக்கள், சமூகநலப் பணிகள்!



(நமது நிருபர்)

தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 50ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழர் தாயகம் எங்கிலும் மற்றும் ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் பல்வேறு நாடுகளிலும் பல்வேறுபட்ட நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகளில் பூசை வழிபாடுகள், பொங்கல்கள், கேக் வெட்டுதல், இரத்ததானம், மரக்கன்றுகள் விநியோகம், புதிய நிர்மாணப் பணிகள் ஆரம்பித்தல், மற்றும் மக்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்குதல் போன்ற பல்வேறு வகை நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள் கேடயங்களையும், பரிசுப் பொருட்களையும், வாழ்த்து மடல்களையும் நேற்று அரசியல்துறை நடுவப் பணியகத்தில் வைத்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஆகியோரிடம் கையளித்தனர்.

பாரதிபுரம் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ். தேசிய கல்லூரி மாணவர்கள், தென்மராட்சி மக்கள் சார்பாக சாவகச்சேரி வணிகர் சங்கம், சாவகச்சேரி றிபேக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா

(VIIIஆம் பக்கம் பார்க்க)

# தேசியக் கொடி ஏற்றலுடன் உணர்வுபூர்வமாக

# தமிழீழ மாவீரர் நாட்களின் நிகழ்வுகள் ஆரம்பம்!

## அனைத்துத் துயிலும் இல்லங்களிலும் நிகழ்வுகள்

(நமது நிருபர்)

**தமிழீழ மாவீரர் நாளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உணர்வுபூர்வமாக தமிழீழத் தேசியக் கொடியேற்றல்களுடன் ஆரம்பமாகின. வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்துத் துயிலும் இல்லங்கள், விடுதலைப்புலிகளின் முகாம்கள், அலுவலகங்கள் அனைத்திலும் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.**

காலை 8.00 மணிக்கு இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழ தேசியக் கொடியினை விசுவமடு மாவீரர்துயிலுமில்லப் பொறுப்பாளர் சீத்தாராம் அவர்கள் ஏற்றி வைத்தார்.

மாவீரர் எழுச்சி நாளையொட்டி

(VIIIஆம் பக்கம் பார்க்க)





மாவீரர் எழுச்சி நாட்களின் ஆரம்ப நாளான நேற்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மாவீரர்களின் உருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

### மாவீரர் நாளில் பதற்றத்தை உருவாக்க படைத்தரப்பு முயற்சி

## வவுனியாவில் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு; மன்னாரில் கண்முடித்தனமான தாக்குதல்!

(நமது நிருபர்)

மாவீரர் நாளில் பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் வகையில், சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக வவுனியாவில் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதோடு, மன்னாரில் கண்மூடித்தனமான தாக்குதலையும் நடாத்தியுள்ளது.

வவுனியா - மன்னார் வீதி வேப்பங்குளத்தில் மாவீரர் தின நிகழ்வில் கலந்து கொண்ட பொது மக்கள் மீது நேற்று

(VIIIஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்தநாளை ஒட்டி கல்வி மேம்பாட்டு நிதியம் உருவாக்கம்!

### சிறந்த பெறுபேறுகளுக்கும், நிதி சிக்கல் உடைய மாணவருக்கும் நிதி உதவி

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாளையொட்டிக் கல்வி மேம்பாட்டு நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு, பின்வரும் தகைமையுடையோருக்கு காசுப் பரிசில்கள் வழங்கப்படும்.

நிதிப்பிரிவால் நடாத்தப்படும் தமிழ்மொழித் திறன் தேர்விலும் பொதறிவு மற்றும் உளச்சார்புத் தேர்விலும் சிறந்த பெறுபேறு பெறுவோருக்கும், தமிழீழத்தில் க.பொ.த. (சா/த) தரத் தேர்வில் சிறந்த பெறுபேறுகளுடன் தேறி நிதிவாய்ப்பின்மையால் தொடர்ந்து

(VIIIஆம் பக்கம் பார்க்க)

## அக்கறைப்பற்று நகரில் போராளி சுட்டுக்கொலை

சாமித்தம்பி உமாகாந்தன் எனும் போராளி நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத நபர்களால் அம்பாறை மாவட்டத்தில் பூரண பாதுகாப்பும் படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதியுமாகிய அக்கறைப்பற்று நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இக்கொலை சம்பந்தமாக புலிகள் அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழுவிற்கு அறிவி துள்ளனர்.



## மாவீரர் நாள் நவம்பர் -27

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன். மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

# 18 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

26.11.2004



செல்வி
அருணா
மனோரகர்
[மு/மல்லாவி
மத்திய கல்லூரி மாணவி]

உலகம் கொண்டாடும்
உன்னத நாளில்
உதித்த எங்கள் உயிரே
உன்னை வாழ்த்துகிறோம்
உயர்க புகழிலும் வாழ்விலும் என்று!

அப்பா, அம்மா, அம்மம்மா,
சங்கீதா, சங்கர், நசிகேதன்,
மாமா, மாமி,மாலவன்
பெரியம்மா, சாதனி, சித்தி,
சித்தப்பா, விதுசன் மற்றும்
நண்பிகள்.

இல. 16.ஜெயந்திநகர்.
கிளிநொச்சி.
(சி-10627)

## அழைப்புக் கட்டளை

பிரிவு:4(1)ஈ
திருகோணமலை என்னும் இடத்திலுள்ள/தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இலக்கம்:- 204/2004
தன்மை:- பணம்,
பெறுமதி:- ரூபா39156/-

*திருமதி பாக்கியராசா-ராஜலட்சுமி,*
*இலக்கம்-46/37,*
*இராஜவரோதயம் சதுக்கம்,*
*கண்டிறோட்,*
*திருகோணமலை.*
**(வழக்காளி)**

எதிர்
*திரு.ச.புஸ்பராசா,*
*மே/பா.திருமதி.இராசதுரை கனகாம்பிகை*
*அண்ணா வீதி,*
*ஆனந்தபுரம்,*
*கிளிநொச்சி.*
**(எதிராளி)**

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தங்களிடம் இருந்து குறித்த சீட்டுப்பணம் ரூபா 39156/= பெறுவதற்காக இந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாராதலினால் இவ் வழக்குக்கான பிராதுக்கு உமது மறுமொழியை 2004 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 8 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இந்த நீதிமன்றில் கோப்பிடுமாறு வேண்டப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னதாக மறு மொழியை அணைக்கத் தவறும் பட்சத்தில் எதிராளியான நீவிர் இல்லாமலேயே ஒரு முகவிளக்கம் இடம் பெறும் என்பதை அறிந்து கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர். பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீங்கள் தோன்றாவிடின் சட்ட முறையான அறிவித்தலுக்கான யாவற்றையும் சேர்ப்பிக்கக் கூடிய முகவரி ஒன்றை மன்றில் கோப்பிடுமாறும் நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2004 ஆம் ஆண்டு
*10 ஆம் மாதம் 11 ஆம் திகதி*
*வரைவு:- வழக்காளியின் சட்டத்தரணி,*
*த.தர்மராசா,*
*10.11.2004* (5060)

**நீதிமன்றக் கட்டளைப்படி**
**பதிவாளர்,**
**தமிழீழ மாவட்ட நீதிமன்று.**

## தேசியத் தலைவரின் பிறந்ததின கொண்டாட்டமும்

*விற்பனை மேம்பாட்டு இலக்கினை எய்தமைக்கான*

## கௌரவிப்பு நிகழ்வு அழைப்பும்

**காலம் 26.11.2004 நேரம் பி.ப. 3.00 மணி**

**இடம் வன்னிவேளாண்தொழில்நுட்ப நிறுவன மண்டபம்.**

**கலை ஆர்வம் கொண்ட அனைத்து அன்பர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.**

*மக்களையும் மண்ணையும் நேசித்தவர்களை நாமும் நேசிப்போம்*

பொற்காலம் வண்ணக்கலையகம்
(சி-10811) **யாழ். சாலை கிளிநொச்சி.**

## வரிவிளம்பரம்

மூத்த, முதன்மையான மாவீரர் களது கலர் படங்கள் விற்பனைக் குண்டு ஒரு தொகுதி 30/= சகல அறிவமுதிலும் பெற்றுக்கொள் ளலாம். (5304)

**வேழன் பதிப்பகம்**

உங்கள் சகலவிதமான அச்சக வேலைகளையும் கணினி மூலம் வடிவமைத்து ஒவ்செற்றில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

## புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

தேசியத்தலைவரின் பிறந்த நாளாகிய இன்று தமிழீழ நிதித் துறையினரால் பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடம் ஒன்றிற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்படவுள்ளது.

இவ் அடிக்கல் நாட்டு விழா வானது இன்று காலை 10.30 மணியளவில் பாரதிபுரம் மகாவித் தியாலய பாடசாலை வளாகத்தில் நடைபெறும் என நிதித்துறையி னர் தெரிவித்துள்ளனர். (கு)

## மலசலக் குழியினுள் வீழ்ந்து சிறுவன்பலி

(ஒட்டுசுட்டான்)

கடந்த திங்கட்கிழமை புதிதாக வெட்டிய மலசலக்குழியி னுள் சிறுவன் தவறுதலாக வீழ்ந்து மரணமானார்.

விளையாடிக்கொண்டிருந்த வேளை சிறுவன் வீட்டின் பின் புறத்தில் புதிதாக வெட்டி மூடப் படாத நிலையில் இருந்த மலசலக் குழியினுள் வீழ்ந்துள்ளார். வசந்த புரம் கற்சிலைமடுவைச் சேர்ந்த செல்வம் கிருசாந்தன் (வயது 05) என்ற சிறுவனே இதில் மரண மானவராவார். (05)

## 2ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளில்...



*அமரர் பரமநாதன் கிறிஸ்ரலின் உதயபானு*

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

பிறப்பு
**12-12-1976**

இறப்பு
**26-11-2002**

**இது சிலுவையில் அறையும் வஞ்சக உலகம்**
**பாவங்கள் மலிந்த பாவிகள் பூமி**
**அதனால் தானோ...**
**கனவுகள் துளிர்விடும் கட்டிளம் வயதில்**
**கல்வியை முடித்துப் பட்டங்கள் கிடைத்தும்**
**தேவனின் திருவடி தேடிச் சென்றாய்?**
**நின்மதியாக நீள் துயில் கொண்டாய்?**
**ஒவ்வொரு உதயமும் உன்முகம் தேடி விழிக்கின்றோம்**
**ஒரு முறையேனும் உன் தரிசனம் கிடைக்குமா**
**எம் அருமை மகளே உதயபானுவே.**

த.மு. இல.115 பாலிநகர்,
வவுனிக்குளம்.
(5310)

தகவல்:
குடும்பத்தினர்

## 4 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்



தாயின் மடியில்
12 - 01 - 1976

தாயக மண்ணில்
29 - 08 - 2000

கிட்டுபீரங்கிப் படை/மோட்டார் படையணி

**மேஜர் சாரங்கன்/அழகன்**

(மயில்வாகனம் அரவிந்தன்)

*யாழ்.மாவட்டம்*

**சாயாதென்றிருந்ததெல்லாம்**
**சாய்ந்துவிழச் செய்தபடி**
**ஓயாதெழுந்தடித்த**
**ஓயாத அலை மூன்றில்**
**ஓங்கியெழுந் தடித்தவனே**
**ஓ அழகா! சாரங்கா**
**வீங்கித்தோள் போராடி**
**வெற்றிதந்து வீழ்ந்தவனே**

**நீ பிறந்த குடியன்றி**
**நீ பிறந்த ஊரன்றி**
**நீ பிறந்த தமிழீழம்**
**நிமிர்வித்த நெருப்பலையே**
**தற்கொடையின் ஆற்றல்**
**சகம் அறியும்! தற்கொடைகள்**
**அற்புதங்கள் ஈழத்தில்**
**ஆற்றும்! அங்கு நீ தெரிவாய்.**

அன்றையதினம் வீர காவியமான அனைத்துப் போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

(சி-10771)

**குடும்பத்தினர்.**


# மாவீரர் எழுச்சிநாள் - முதல் நாள் நிகழ்வுகள்


மட்டு.தரவையில் கேணல் பானு


மட்டு.தரவையில் தளபதி பிரபா


மட்டு.மாவடி முன்மாரியில் கௌசல்யன்



கிளிநொச்சியில் கேணல் தீபன்


அரசியல்துறை ந.பணியகத்தில் கேணல் ரமேஸ்


விசுவமடுவில் சீத்தாராம்






முல்லைத்தீவில் கேணல் சூசை

மல்லாவியில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவாலய திறப்பு நிகழ்வில்...


தளபதி லோரன்ஸ்


கனகரத்தினம் பா.உ


தமிழீழத் தேசியத்தலைவருக்கு கேடயம் வழங்கல்

-மட்டு.அம்பாறை மாவட்டங்களில்-

## தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பம்!

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்றுக்காலை தேசியக் கொடியேற்றத்துடன் மாவீரர் தின முதல்நாள் நிகழ்வுகள் ஆரம்பமானது.

பிரதான நிகழ்வுகள் தரவை மாவீரர்துயிலும் இல்லத்தில் மட்டு அம்பாறை மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் (மாமா) தலைமையில் காலை 8.30 மணிக்கு நடைபெற்றது இந்நிகழ்வில் பொது ஈகச் சுடரினை மட்டு.அம்பாறை மாவட்ட துணைத் தளபதி பிரபா ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் போராளிகளின் உறுதியுரை என்பன நடைபெற்றன. மலரஞ்சலியினை ஜெயந்தன் படையணி சிறப்புத் தளபதி ஜெயார்த்தனன் ஆரம்பித்து வைக்க தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் மட்டு அம்பாறை வனவளப் பொறுப்பாளர் டெளரி, மட்டு அம்பாறைப் பொருண்மியப் பொறுப்பாளர் சலீம் (வள்ளல்), மட்டு. அம்பாறை துணை அரசியல் பொறுப்பாளர் தயாமோகன், மட்டு. அம்பாறை குட்டிசிறி மோட்டார் படையணியின் தளபதி புவி, சாள்ஸ் அன்ரணி படையணியைச் சேர்ந்த தளபதிகளான பல்லவன், மிரேசு,மட்டு அம்பாறை நிதித்துறைப் பொறுப்பாளர் அகச்சுடர் மற்றும் தளபதிகளான உமாராம், கலைமதுரன்,சாந்தன்,கஜன் படைத் துறைப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த நாவண்ணன், மணிவண்ணன், மட்டு. அம்பாறை மூத்த தளபதி நாகேஸ் நகர அரசியல் துறைப்பொறுப்பாளர் அதியமான், குடும்பிமலைக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் புகழன், தரவை மாவீரர் துயிலும்இல்லப் பொறுப்பாளர் றொசான் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதேவேளை தாண்டியடி துயிலும் இல்லத்தில் தமிழீழ தேசியக்கொடியினை மாவடி முன்மாரிக்கோட்டத் தளபதி ரமணனும், மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத்தில் அம்பாறை மாவட்டத்தளபதி ஜனார்த்தனனும் வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆண்டான் குளக்கோட்டத் தளபதி ஏற்றி வைத்தனர். இந்நிகழ்வில் ஏராளமான போராளிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழீழத் தேசியத் தலைவருக்கு மல்லாவியில் கேடயங்கள் வழங்கல்

மல்லாவி கரும்புலிகள் நினைவாலய திறப்பு விழா நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தையொட்டி நினைவுக்கேடயம் வழங்கப்பட்டது. பாண்டியன் குளம், துணுக்காய் புனர்வாழ்வுக்கழகமும் மற்றும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து வழங்கிய இரண்டு நினைவுக்கேடயங்களில் முதலாவது கேடயத்தினை அந் நிறுவனத் தலைவர் க.குமாரசாமியிடம் இருந்து மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் பெற்றுக்கொண்டார். இரண்டாவது கேடயத்தினை துணுக்காய் பிரதேச சபை செயலாளரிடம்இருந்து தளபதி லோரன்ஸ் பெற்றுக்கொண்டார். (கு,24)

# மாவீரர் எழுச்சிநாள்—2004

## நினைவொலி எழுப்பலும், சுடரேற்றலும்

27 ஆம் திகதி சுடரேற்றும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். மாலை 6.05 மணிக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் ஒரு மணித்துளி நேரம் ஒலியெழுப்பும், இந்த நேரத்தைத் தொடர்ந்து எல்லா மக்களும் அகவணக்கம் செலுத்துவார்கள்.

இந்த நினைவொலி எழுப்பப்படும் போது காத்திருந்து ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்துவது அனைத்து மக்களினதும் கடமையாகும். நினைவொலி எழுப்பப்படும்போது வீதியால் பயணம் செய்பவர்கள் நடந்தாயினும், வாகனத்திலாயினும் போனால் உடன் நின்று பின் ஒரு மணித்துளி நேரம் அந்தந்த இடங்களிலேயே அகவணக்கம் செய்தல் வேண்டும்.

துயிலும்இல்ல மைதான நிகழ்வில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வுக் கொநத ளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவார்கள். ஒவ்வொரு இல்லங்களிலும், வாசல்களிலும் மாவீரரின் சுடரொளியை மக்கள் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும் ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப் பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகங்களின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாகதீபங்கள் இவை எனக்கூறத்தக்கதாக நினைவு கூரப்படவேண்டும். நட்சத்திரங்கள் போல தமிழீழமெங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக் கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீப்பந்தங்கள் ஏற்றியும், பொது இடங்களில் பெரிய சுடர்கள் ஏற்றியும் நினைவு கூர வேண்டும்.

இந்தச் சுடரேற்றும் நிகழ்வானது விடுதலைப் பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

தமிழீழ மாவீரர் பணிமனை.

## கரும்புலிகள் நினைவாலயம் மல்லாவியில் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாவீரர் தின நிகழ்வினையொட்டி மல்லாவிப் பிரதேசத்தில் கரும்புலிகள் நினைவாலயம் ஒன்று நேற்று மாலை 4.00 மணியளவில் தளபதி லெப். கேணல் லோரன்ஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நினைவாலய நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மல்லாவிப் பிரதேச மாவீரரின் பெற்றோர்கள் "பாண்ட்" வாத்திய இசை முழங்க மல்லாவி சர்வதேச தொலைத் தொடர்பு மையத்தில் இருந்து கரும்புலிகள் நினைவாலயத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பின்னர் நினைவாலயத்தில் வைக்கப்பட்ட பொது ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார். அடுத்துத் தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். அடுத்து 14 கரும்புலிகளின் நினைவாலயத்தின் நாடாவினை தளபதி லெப்.கேணல் லோரன்ஸ் அவர்கள் வெட்டித் திறந்ததுடன் திருவுருவப் படங்களையும் திரைநீக்கம் செய்து வைத்தார். பின்னர் கரும்புலிகளின் திருவுரு வப்படத்திற்கான பொதுச் சுடர் [illegible]ன மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி பொன்.தியாகம் அவர்கள் ஏற்றிவைத்தார். வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஞ.தனுராஜ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தலைமையுரையினை அடுத்து நினைவுரைகளை பொன் தியாகம், பாராளு மன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர். (கு,24)

### முச்சக்கர வண்டி ஊர்வலம்

மா[illegible]வீரர் தினத்தை முன்னிட்டு திரு[illegible]லை முற்றவெளி அரங்கில் இருந்து மாபெரும் முச்சக்கர வண்டி ஊர்வலம் ஒன்று நேற்று இடம்பெற்றது. இவ் எழுச்சி ஊர்வலத்தில் சுமார் 250 முச்சக்கர வண்டிகள் இடம்பெற்றிருந்தன.

## மன்னார் வவு.சம்பவங்கள் குறித்து தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுத்தலைவருக்குக் அவசர செய்தி

### -மாவீரர் நாளில் குழப்பம் விரும்பத்தக்கதல்ல எனத் தெரிவிப்பு

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் சிறிலங்காப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் டொன்புறூவ் ஹொவ்டேக்கு மன்னார் சம்பவம் விபரீதமானது. பொதுமக்களிற்குப் போர்நிறுத்த காலப்பகுதியிலும் மாவீரர் நாள் நிகழ்வுகளிலும் குழப்பத்தை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதல்ல என்பதைக் குறிப்பிட்டு அவசர செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

தயவு செய்து உடனடியாக இவ் விபரீத நிலையைத் தடுப்பதைக் கருத்திற்கொள்ளவும் இவை எமக்கு மிகவும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது முதலாவதாக சமாதான உடன்படிக்கைக் காலப்பகுதியிலும் தமிழ் மக்கள் தமது மாவீரர்களை நினைவு கூர்ந்து வணக்கம் செலுத்துகின்ற மாவீரர் நாளில் பொதுமக்களிடையே குழப்பத்தையும், கலகத்தையும் ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும் சிறிலங்கா இராணுவம் அமைதியான ஞாபகார்த்த நிகழ்வைக் குழப்புவதுடன், பொதுமக்களிற்கு ஆத்திரமூட்டும் செயற்பாட்டை திட்டமிட்டுச் செயற்படுகிறது எனக் கருதப்படுகிறது. இவ்விடயத்தில் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இன்றும் தலையிடவில்லை. இதை ஒத்த நிலமை வவுனியாவிலும் கூட மேற்கொள்ளப்பட்டிருகின்றது. அங்கு சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் பொதுமக்களால் உருவாக்கப்பட்ட வளைவுகள், அலங்காரங்களை அகற்றும் நடவடிக்கையிலீடுபட்டுள்ளனர். பதற்றநிலை அங்கு காணப்படுகிறது. நாம் ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாக நோர்வேத் தூதருடன் இப்பதற்ற நிலமை பற்றித் தொடர்பு கொண்டு வெளிப்படுத்தியுள்ளோம். இது உடனடியாகத் தடுக்கப்படவேண்டும். மன்னாரில் எமது உறுப்பினர் தடையின்றிச் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டதை உறுதிப்படுத்துமாறும் பொது மக்கள் கூட பாதுகாப்பாக செயற்பட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதுடன் இக்குழப்ப நிலை தொடர்பான எமது அச்சத்தைத் தடுக்கவும் இதுவே எமது தெளிவான நிலைப் பாடு உங்கள் உடனடிப் பதிலை எதிர்பார்க்கின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐயந்த தனபால தள்ளாடியுடன் திரும்பினார்

(மன்னார்)

அரசாங்கத்தின் சமாதானப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தார். ஆயினும் அவர் தனது பயணத்தை தள்ளாடி முகாமுடன் நிறுத்திக்கொண்டு வவுனியா திரும்பினார். அவர் அங்கு போர் நிறுத்த கண்காணிப்பு குழுப் பிரதிநிதி. பிலின் பிலின்ஸ்டிட் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் அரசாங்க தரப்புப் பிரதிநிதிகள் இருவர் மற்றும் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் இருவர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார் இந்தச் சந்திப்பு தள்ளாடி இராணுவ முகாமில் நடைபெற்றது.

நேற்று மன்னாரில் படைத்தரப்பினர் தமிழீழத் தேசியக்கொடியேற்றிய மக்களின் மீது தாக்குதல் நடத்தியதன் பின்னர் அங்கு ஏற்பட்ட நிலையை அடுத்து ஜயந்த தனபால தள்ளாடி இராணுவ முகாம் சந்திப்பின் பின்னர் வவுனியா திரும்பினார். (32)

## வெறிபிடித்தவர்கள் போன்று இராணுவம் நடந்து கொள்கிறது

### –வவு. அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானவேல்

வவுனியா வேப்பங்குளத்தில் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பிய சிறிலங்கா இராணுவம் இனவெறி பிடித்தவர்கள் போல் அந்த இடத்தில் நடந்து கொண்டதாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஞானவேல் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் தங்களை மட்டுமன்றி அந்த இடத்திற்குச் சென்ற யுத்த நிறுத்த கண் காணிப்பாளர்களையும் அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்டதாகவும் கூறினார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருடன் இன்றைய பிரச்சினை தொடர்பாக உரையாடிக் கொண்டிருந்த சமயம் வேப்பங்குளம் சம்பவம் தொடர்பாக தகவல் கிடைத்தது.

அந்த இடத்திற்கு நான் சென்றபோது செல்ல விடாமல் வழி மறித்த இராணுவம் உந்துருளியை நிறுத்தி சாவியை எடுத்தது.

என்னைத் தீவிரமாக சோதனையிட்டது. நெற்றியில் துப்பாக்கியை வைத்த இராணுவ மேஜர் தர அதிகாரியொருவர் ''எல்லாவற்றிற்கும் நீதான் காரணம். முதலல் உன்னைச் சுடவேண்டும் என எச்சரித்தார்.

அந்த இடத்திற்கு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் வாகனத்தில் வந்தபோது வாகனத்தில் செல்ல அனுமதிக்கப் படாத காரணத்தினால் அவர்கள் இறங்கி நடந்து சென்றார்கள்.

இராணுவத்தினர் நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும் போது அவர்களது முகத்தில் இனவெறி மிருகத்தனம் போன்றன காணப்பட்டன.

மக்களின் எழுச்சியையும், கொதிப்பையும் பொறுக்க முடியாதவர்களாக அங்கு அவர்கள் காணப்பட்டனர் என்றார்.

## மன்னார் வவு. தாக்குதலைக் கண்டித்து கூட்டமைப்பு பா.உ.க்கள் ஆர்ப்பாட்டம்

### - பாராளுமன்றக்கூட்டம் ஒத்திவைப்பு

மக்கள் மீது இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலைக் கண்டித்து பாராளுமன்றத்தில் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது நேற்று முன்தினமும் நேற்றும் மன்னார்ப்பகுதியில் மாவீரர் தின ஏற்பாடுகளில் ஈடுபட்ட தமிழர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல்களை நடாத்தியதோடு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மீதும் தாக்கினர். இவற்றைக் கண்டித்து நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத் தொடர் இடையில் பாராளுமன்றத்தின் நடுப்பகுதிக்கு இறங்கி மன்னார் வவுனியா பகுதிகளில் இராணுவத்தினர் நடத்தும் கண் மூடித்தனமான தாக்குதலை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் ஒருபக்கச் சார்பற்ற குழு ஒன்று நியமிக்கப்பட்டு இது தொடர்பாக விசாரிக்கவேண்டும். அவசரகால சட்டமோ, பயங்கரவாத தடைச் சட்டமோ இல்லாத நிலையில் இராணுவம் நடாத்தும் ஒழுங்கு பேணும் நடவடிக்கை என்ற போர் வையில் மக்கள் மீது நடாத்தும் தாக்குதலை நிறுத்தவேண்டும், தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதானால் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு முப்படைத்தளபதிகளையும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரையும் 27ஆம் திகதி பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாட ஒழுங்கினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற விடையங்களை முன்வைத்து பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறாத வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது பிரதி சபாநாயகர் சபையை ஒத்திவைத்து விட்டு உள்ளே சென்று பின் சில மணிநேரம் கழித்து மீண்டும் வந்து இப் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்கு கட்சித்தலைவர்களை சபாநாயகரின் அலுவலகத்திற்கு வருமாறு அழைத்து பேசப்பட்டு மீண்டும் சபைகூடியது. இதில் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தாம் அறிந்தவரை மன்னாரில் பாராளுமன்ற உறுப்பினர் தாக்கப்படவில்லை எனவும், மூன்று விடுதலைப்புலி உறுப்பினர்களும் 4பொதுமக்களுமே தாக்கப்பட்டதாகவும் அப்பொதுமக்கள் கூட புலிகளின் தேசியக்கொடியை ஏற்றவேண்டாமென இராணுவம் தடுத்தபோது அதனை மீறி ஏற்ற முற்பட்டவர்களே எனக் கூறினார். இதனை வன்மையாக எதிர்த்த கூட்டமைப்பினர் தமது கருத்தை மீண்டும் வலியுறுத்த போராட்டத்தைக் கைவிடுமாறு சபாநாயகரால் கேட்கப்பட சரியான உறுதிமொழி கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடமுடியாதென கூட்டமைப்பினர் கூறினார்.

இதனால் பாராளுமன்றக் கூட்டத் தொடரை வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிவரை ஒத்திவைப்பதாகக் கூறி முடித்ததாகவும் தெரிய வருகிறது.

## மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்ப அரச படையினர் ஆதரவளிக்கின்றனர்


### –கௌசல்யன் குற்றச்சாட்டு

மாவீரர் தினம் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டுவரும் நிகழ்வுகளைக் குழப்பும் சக்திகளுக்கு சிறிலங்கா அரசபடை பூரண ஆதரவு வழங்குவதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று மாலை அக்கரைப் பற்றில் தமது போராளி காந்தன் எனப்படும் சாமித்தம்பி உமா காந்தன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போது இந்தக் குற்றச் சாட்டை அவர் சுமத்தினார்.

அக்கரைப்பற்றுப் பிரதேசம் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பிரதேசம். இப்படியான பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கின்றதென்றால் இதற்கு யார் பொறுப்பு என வினா எழுப்பிய அவர், பாதுகாப்பு வழங்க வேண்டியவர்கள் அதனைச் செய்யத் தவறிவிட்டார்கள். அரச படையினரின் பூரண ஒத்துழைப்புடன்தான் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுகின்றன. திட்டமிட்ட வகையில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவே இதனை நாம் கருதுகின்றோம். இந்தச் சம்பவம் பாரதுாரமான யுத்த நிறுத்த மீறலாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## 50ஆம் அகவையில் வாழ்த்துகின்றோம் பொன்விழா நாளில் வாழ்த்துகின்றோம்




தமிழினத்தின் தேவையுணர்ந்து
தன்னை முழுதாய் அர்ப்பணித்து
புயலை நோக்கிய புயலாக வீசி
புறமொன்று படைத்து அறமிங்கு நாட்டி
வரலாறளித்த சுதந்திர தாகத்தை
விருப்புடன் ஏற்று வீரத்தின் சிகரமாய்
வீற்றிருக்கும் எம் ஈழத்தின் மன்னனே!
உன் அயராத உறுதிக்கு நிகரேது...
எம் பள்ளி பாரதியின் சந்ததியும் வாழ்த்திப் பாட
அஞ்சாத தலைவனாய் என்றென்றும் வாழி! வாழி!

மு/பாரதி வித்தியாலயம் அதிபர். ஆசிரியர். மாணவர்கள். ஊழியர்கள்.

(சி-10640)

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்!




மாவீரர்களின் கனவாகியதமிழீழத்தை மீட்டெடுக்கும் இலட்சியத்துடன் எமது தானைத் தலைவரின் 50 ஆவது பொண்ணான அகவையை பூர்த்தி செய்யும் தமிழீழ தேசியத் தலைவரை நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
விசேட ஆணையாளர். செயலாளர். உத்தியோகத்தர். பணியாளர்கள்.
பிரதேச சபை துணுக்காய்

(சி-10807)

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



தமிழரின் விடிவிற்காய்
உதித்த எங்கள் தலைவனின்
ஐம்பதாவது பிறந்தநாளில்
பலகலையும் பெற்று நீடூழி காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

பூநகரி வர்த்தக சங்கம்
பூநகரி வாழ் மக்கள்

(சி-10816)




## தேசியத்தலைவரின் 50ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்




தமிழர்க் கொரு தனியரசு வேண்டு மென்று வீரமுடன் தானைத் தலைவனாக போராடும் எம் தலைவர் நீடூழி காலம் வாழ்க வாழ்த்துகின்றோம்.

பள்ளிக்குடா கடற்தொழில் சங்கம்
பள்ளிக்குடா பொது நிறுவனங்கள்
பாடசாலைச் சமூகம்.

(சி-10810)


## தேசியத் தலைவருக்கு 50ஆவது பிறந்த நாள் வாழ்த்து



எங்கள் தாயக மண்ணோடும். மக்களோடும். என்றென்றும் பிரிவில்லாது பாசமுடன் உறவாடி. நூறாண்டு காலம் நோய் நொடியின்றி புதிய வரலாற்றை எழுதும் புகழ் பூத்த காவிய நாயகனாக. தமிழர்களை சுந்திர புருஷர்களாக பூமிப் பந்தில் உலா வர வைத்திடும் அடிமை விலங்கொடிக்கும் தமிழ்த்தாயின் உத்தம புத்திரனாக. வாழ்க வாழ்க என ஐம்பதாம் அகவையில் அன்பு ததும்ப வாழ்த்துகின்றோம்.

**பூநகரி பல நோக்குக் கூ. சங்கம்**
**வாடியடி.**

## பொன் விழா காணும் எம் தலைவா நீ வாழியவே!



தாங்கு புகழ் தானையின் ஓங்கு புகழ் தலைவன் நீ
புலிக்கொடியாடப் பல்லாண்டு புவி மிசையில் தேரோட்டு
மானுடம் வாழும் வரை மா காலம் புகழாய் வாழ்க!
நூறு நூறாண்டு காலம் வீறுடன் நிறைவாய் வாழ்க!


*26.11.2004 இன்று காலை 10.00 மணிக்கு வடமராச்சி கிழக்கு மருதங்கேணி சந்தியில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் வாழ்த்து மடல் திரைநீக்கம் செய்யப்படும்.*
*பின் காலை அம்மக்களால் வாழ்த்துச் செய்தியை முல்லைத்தீவு நகர் நோக்கி துவிச்சக்கர வண்டி பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நிகழ்வில் கலந்து கொள்ளும் தளபதி அவர்களிடம் கையளிக்கப்படும்.*
*மாலை 5.00 மணிக்கு பிறந்த தின ஞாபகார்த்தமாக வெற்றிலைக்கேணி கடற்கரையில் களங்கரை விளக்கு தீபம் (வெளிச்சக் கோபுரம்) திறந்து வைக்கப்படும்.*
*மாலை 6.00 மணிக்கு வடமராச்சி கிழக்கு புனரமைப்பு குழுவினரால் தமிழீழ வடிவிலான கேக் வெட்டப்படும்.*

*இன் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் எம் இனிய உறவுகளை அன்புடன் அழைக்கின்றோம்.*

வடமராச்சி கிழக்கு க.தொ.கூ.சங்கம் சமாசம்
வடமராச்சி கிழக்கு புனரமைப்புக் குழு
வடமராச்சி கிழக்கு வர்த்தக சங்கம்
வடமராச்சி கிழக்கு கமக்கார சம்மேளனம்,மக்கள்.
வடமராச்சி கிழக்கு ப.தெ. வள.கூ. சங்கம்

(சி-10803)

## 50ஆவது அகவைதனில் வாழ்க வளமுடன்!



தமிழினத்தின் துயர் துடைக்க
தாயகத்தில் வந்துதித்த
தானைத் தலைவனே! வாழ்க!

குனிந்த தலைகள் நிமிர்ந்திடவும்
நலிந்த உளங்கள் எழுந்திடவும்
துணிந்து சென்றீர் களமாட – இங்கு
கனிந்திடும் ஓர் தமிழீழம்
காலங்கள் தொலைவிலில்லை.

மக்கள் பட்ட வேதனைகள்
மாறாத வடுக்களாய் – உம்
மனதை தொட்டதனால்
மாண்டு போகும் தமிழினத்திற்கு
புத்துயிர் அளிக்க வந்த
புதல்வனே! வாழ்க!

சுற்றமும் சூழலும்
பெற்ற உறவுகளும்
பிரிந்து வாழும் சிறார்களுக்கு
அடைக்கலம் தந்து – எமை
அரவணைக்கும் அன்பு மாமாவே!
என்றென்றும் வாழ்க!
வாழ்க வளமுடன்!
மலரட்டும் தமிழீழம்!

ஆக்கம்:– சிறார்கள்
குருகுலம்,
கிளிநொச்சி.

(5309)



# சரித்திர நாயகன் வாழ்கவே!

வரலாற்று நாயகனை வாழ்த்தி நிற்போம்!
வாழ்நாள் முழுவதும் நலம் பெறவே
வருங்காலம் தமிழர்க்கு ஒளி தரவே
வளம் யாவும் நாம் பெற்று தலை நிமிர்வோம்!
சரித்திர நாயகனே! வாழ்க! வாழ்க!!

**சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்**

இல. 41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (சி-10929)





## தரணியெல்லாம் தனியரசாய் வாழி! வாழி!

காலமகள் கோலத்தில் கருவாகிக்
காரலையின் கரையதனில் உருவான
திருவே என் செல்வமே தமிழே தலைவா
தீரமுறு நம்தமிழர் திகழொளியே
திருநிலத்து நாயகனே நம்தலைவா!
தீந்தமிழர் உள்ளமெல்லாம் நிறைந்த கோவே!
தருகின்றோம் பல்லாண்டு வாழி! வாழி!
தரணியெல்லாம் தனியரசாய் வாழி! வாழி!

*யாழ். மாவட்ட*
*தனியார் பஸ் உரிமையாளர்கள்*
*சங்கங்களின் தலைமைச் செயலகம்.*

50/1பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-10694)

## ஓங்கிடும் வீரமுடன் வாழ்க!



விசையோடு கடலாட
இசையோடு மழைபாட
வல்வை மண் அவதரித்த
வல்லமையின் பேரொளியே
ஓங்கிடும் வீரமுடன்
ஓவியமே வாழ்க! வாழ்க!

**வலம்புரி அடிகு மாடம்**
பிரதான வீதி, வட்டுக்கோட்டை. (சி-10773)

## மாபெரும் தலைவனை 50 ஆவது அகவையில் வாழ்த்துகின்றோம்



வன்னி மலர்க் காட்டின்,
வாச மலரனைத்தும்--எங்கள்
கன்னித் தமிழ்த் தலைவன்,
"கரிகாலனைப"
பல்லாண்டு பல்லாண்டு
பல கோடி நூறாண்டு
வாழ்க! வாழ்க! என
வாழ்த்திப் போற்றுகிறது.

**"வன்னி மலர்க்காடு"**
**இல: 206-7 ஆம் வாய்க்கால்,**
**கிளிநொச்சி,**
**தமிழீழம்** (5305)

## வாழிய பல்லாண்டு

வல்லைக் கடலருகே வந்துதித்த நாயகனே
தாயக விடிவிற்காய் தமிழ்த்தாய் தந்த கதிரவனே
எம்மினத்தின் காவலனே
உங்கள் ஐம்பதாவது அகவை நாளை
ஆண்டவன் அருள் புரிவான்
வற்றாத வாவி போலவளம் கொழிக்கும் கடலைப் போல
மணம் வீசும் மலரைப் போல
மணம் குன்றா சந்தணம் போல
ஆலமரம் போல ஆழ வேரூன்றி
எங்கள் அண்ணா நீர் வாழி
கோபுரம் போல் உயர்ந்து குடையாக நிழல் தந்து
தமிழன் காரிருள் போக்கிய கரிகாலன் அண்ணன் வாழி
பிரபாகரன் என்னும் நாமம் வாழி
பேரொளியே வாழிய வாழிய
முறிகண்டி முதல்வனே முன் நின்று காப்பவனே
பல்லாண்டு இவர் வாழ
உன் பதிதனிலே நாம் பணிந்தோம்.

*ஆக்கம் : திருமுறிகண்டி கரன்*

**ஐங்கையன் உணவகம்**
திருமுறிகண்டி. (சி-10781)



## தாயகத்தின் விடிவெள்ளி எம் தலைவனை நாம் வாழ்த்துகின்றோம்



சேனை அடக்கிய தாளைத் தலைவனுக்கு
வானைப் பிளக்க நாம் கூறும்
வாழ்த்துக்கள் பற்பல
வரலாறு படைத்து எமை வாழ வைத்த
தளராத எம் தலைவனை
உளமார நாம் வாழ்த்துகின்றோம்.
கல்வியே எமது மூலதனமென்று
கருத்தொருமித்துக் களமாடி
உலகறியச் செய்த உத்தமனை
உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.
ஆண்ட எம் தமிழினத்தை மீண்டெழச் செய்து
வாழ்வு தந்து வாழ வைத்த
வளமாம் எம் தலைவனை
வாயார வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**மு/விக்னேஸ்வரா வித்தியாலயம்,**
*கோம்பாவில்,*
*புதுக்குடியிருப்பு.* (5062)

## உயிர்வரவே வாழ்த்துகின்றோம்



தமிழர் இரவுகளை
கரைத்த வரவே!
வரவுக்குச் சிகரமான மிடுக்கே! மிடுக்கிற்கு
உரம்சேர்த்த உறவே!
உறவிற்கு உரமான பாசமே!
பாசத்தால் எமையாளும் முதற்தமிழே!
மூத்த குடியின் பெருவரமே!
ஆர்க்கும் வெற்றி முரசின் அடிநாதமே!
உம் சென்ற அகவத்தனையும்.
வென்றவைகளால் ஒளிர்ந்தவை
இன்றதற்கோர் இணையற்ற மகுடம்
வெற்றி அகவுகளை உடையாய்
எப்போதும் உம்பலமே!
உலகத் தமிழர் பலம் கற்பிதங்கள் பல தந்த
உயர் தலைவா!
ஈழதேசத்தின் உயிர்ப் பசுமையே!
இன்னும் தொடட்டும் வானங்களை
உங்கள் தமிழ்ச்சக்தி.
வல்லமை உங்கள் பிறந்த நாளில்
எல்லைகளற்ற ஆனந்தம் எங்களுக்கு.

***பணிப்பாளர்கள், பணியாளர்கள்,***
***அங்கத்தவர்கள், தொண்டர்கள்***
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டக்கிளையும்,
பிரிவு அலகு கிளைகளும். (சி-10638)

# தேசியத்தலைவருக்கு கேடயங்கள், வாழ்த்துமடல்கள் வழங்கல்



தென்மராட்சி மக்கள் சார்பாக சாவகச்சேரி வணிகர் சங்கம்



ஓவியர் தீசன் குடும்பத்தினரின் 50 அடி நீள வாழ்த்து மடல்




யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்



கிளிநொச்சி வலுவிழந்தோர் சங்கம்



யாழ் தேசியக்கல்லூரி மாணவர்கள்

# தமிழீழத் தேசியத் தலைவரின் கீழ் போராளியாக செயற்படுவதையிட்டுப் பெருமை அடைகிறேன்!

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கீழ் ஒரு போராளியாக, பொறுப்பாளராக, தளபதியாக இருந்து செயல்படுவதை இட்டு நான் பெருமை அடைகிறேன். தவறான கருத்துக்களைப் பரப்பி மக்களைக் குழப்பும் உளவியல் போரை நடத்த சிங்கள அரசாங்கம் முனைகிறது. எனவே நாம் அவர்களின் உளவியல் போரையும் முறியடிக்க வேண்டும் எனவே மக்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும். என தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படைத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்துள்ளார்.

தங்களுக்கும் தேசியத்தலைவர் அவர்களுக்கும் இடையில் கருதது வேறுபாடும் மனக்கசப்பும் இருப்பதாக சில பத்திரிகைகளும் ஊடகங்களும் செய்திவெளியிட்டுள்ளன. இது சம்பந்தமாக தங்களின் கருத்தை இவ்விடத்தில் கூறிக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். எனவடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லததுக்கு முன்பாக நடைபெற்ற மாவீரர் நாள் சிறபபு நிகழ்வில் கலநது சிறப்புரையாற்றுகையில மாவீரர்களின பெற்றோர்களால் கேட்கபபட்ட கேள்விகருப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார.

கடற்புலிகளின் சிறப்புததளபதி கேணல் சூசை அவர்கள் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், எனக்கும் தலைவர் அவர்களுக்கும் இடையில் பிரச்சினை என்று வெளியாகிய இந்தச் செய்தியானது சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்ற ஒரு உளவியல் போர். சமாதான காலத்தில் இப்படியான உளவியல் போர்களை அடிக்கடி இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் இப்படியான உளவியல் போரை 1988 ஆம் ஆண்டு இந்திய அரசு கூட. நடத்தி வந்திருந்தது. இது உங்கள் அனைவருக்கும் தெரியும். தலைவருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இப்படியான கட்டுக்கதையை சிறிலங்கா அரச படைகள் மட்டும் செய்யவில்லை. இந்த நாட்டினுடைய சனாதிபதி சந்திரிகா கூட இந்தியா சென்றிருந்த போது இந்துப்பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் சூசை சிகிச்சைக்காக செல்லவில்லை அவர் விடுதலைப் புலிகளின் தலைவருடன் முரண்பட்டுத்தான் வெளிநாட்டுக்குப் போனவர். அங்கே புலிகளின் போராட்டத்தின் மூத்த நலன் விரும்பிகளின் வற்புறுத்தலின் காரணமாகத் தான் மீண்டும் வன்னிக்குத் திரும்பி வந்தார் என கூறியிருந்தார். ஆனால் நான் வெளிநாடு சென்றது சிகிச்சைக்காகத் தான் இது தான் உண்மை. நான் சிகிச்சைக்காகக் தான் சென்றேன். சிகிச்சை பெற்றேன். இப்போதும் சிகிச்சை பெறறு வருகிறேன.

தலைவருக்கும் எனக்கும் இடையில் முரண்பாடுளன அரசாங்கம் உளவியல் போரை தொடங்கியதன் நாமும் எங்கள் தலைவா தமிழீழ கடற்படையை கட்டி எழுப்புவதற்காக கிட்டத்தட்ட 300 கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறார். இந்தப் பணத்தை புலம் பெயர்ந்து வாழ்கின்ற எங்கள் மக்களிடம் கேட்டிருக்கிறார் என்ற தகவல் ஒரு வழியாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு சென்றடைய அதனைத் தடுத்து நிறுதத வேண்டும் என்ற நோக்கில் தான இந்தக் கதையை சிறிலங்கா அரசாங்கம் பரபபியது. உண்மையில் தலைவருடன் சமகாலத்தில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதனால் தலைவரைப் பற்றி முழுமையாகத் தெரிவதற்கு வாய்ப்பில்லை உண்மையில் தலைவருககுக் கீழ் இருந்து ஒரு போராளியாக, பொறுப்பாளராக, தளபதியாக செயற்படுவதை இட்டு நான் பெருமை அடைகிறேன். எங்களுடைய தலைவர் தமிழ் மக்களுக்கான விடுதலைப் பாதையை சீரான பாதையில் நகாத்திச் செல்கின்ற ஒரு அச்சாணியாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பவர் நான் அவரிடத்தில் மதிப்பையும், மரியாதையையும் வைத்துக்கொண்டு தான் இருக்கிறேன். இந்த நிலையில சிறிலங்கா அரசாங்கம் எம்மீது ஒரு பெரும் உளவியல் போரை நடத்துகிறது. இதன் மூலம் மக்களிடத்தில், ஒரு பெரும் குழப்பத்தை உண்டு பண்ணி விடலாம் என நினைக்கிறது. இன்று இவாகள தமது கோர முகததை வல்வெட்டிததுறையிலும் நிகழத்தி இருக்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பல கட்டங் களையும் போராடித் தாண்டி வந்து இன்று இந்த நிலையை நான் அடைவதற்கு எங்கள் தலைவர் அவர்களின் வளர்ப்புத் தான் காரணம். 1985 ஆம் ஆண்டு வெற்றிலைக் கேணிக் கடலில் நாம் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கடற்படை எம்மைத் தாக்கியது. நாங்கள் பின் வாங்கினோம். பத்து ஆண்டுகளின் பின்னர் தலைவரது நேர்த்தியான வழிகாட்டலில் அதே கடற்படையை நாம் விரட்டி அடிக்கிறோம்.

இன்று கருணா என்ற நச்சு விதை எங்கள் போராட்டத்தில் போட்டு விட்டது. இதனை அரசு தூக்கி வைத்து ஆடிக்கொண்டிருக்கிறது. இதனை எல்லாம் தூக்கி எறியுங்கள். இவர்களின் பேச்சை நீங்கள் ஏற்றுக்கொண்டால் தான் அவர்கள் உளவியல் போரில் வெற்றி அடைவார்களள. நீங்கள் அதனைக கருத்தில் எடுக்காது விட்டீர்கள் என்றால் உளவியல் போரிலும் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு விடுவார்கள். அன்பான மக்களே நாங்கள் அவர்களை நிழல் யுத்தத்தில் எப்படித் தோற்கடித்தோம் அதே போல அவர்களை உளவியல் யுத்தத்திலும் நாங்கள் தோற்கடிப்போம். அதற்காக நீங்கள் அவர்களின் கருத்துக்களை நம்பாதீர்கள். இதுதான் இதற்கான ஒரேவழி. நாங்கள் ஒரு மரபுவழி இராணுவம். ஒரு இராணுவத்தின் தளபதிகள் எங்கேயும் எப்போதும் மாற்றப்படலாம். மரபுவழி இராணுவமாக நாங்கள் பரிமாணம் பெற்றது தான் இதன் காரணம். உங்கள் பிள்ளைகள் எம்மை மரபு வழிப்படையாக உயர்த்தி இருக்கிறார்கள். இந்தக் கட்டமைப்பில் இத்தகைய மாற்றங்கள் நிச்சயம் நடைபெறும். இவை குழப்பத்துக்குரிய காரணங்கள் அல்ல. எனவே நீங்கள் குழம்ப வேண்டாம். ஒன்றிணைந்து அவர்களின் உளவியல் போரையும் முறியடிப்போம் எனவும், அவர் மேலும் தெரிவித்தார். (லோ,11)

# ஈ.என்.டி.எல்.எப். ரங்கப்பா கொழும்பில் சுட்டுக்கொலை

ரங்கப்பா எனப்படும் 45 வயதுடைய சனிபோய் அலிக்கான் என்பவர் நேற்று மாலை 6.30 மணிக்கு கொழும்பு தெமட்டக்கொட பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் கடந்த 20 வருட காலமாக சென்னையில் வாழ்ந்த பின்னா கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே இலங்கை திரும்பியிருந்தார். இவர் ஈ.என்டி.எல்.எப் அமைப்பின் ஆரம்ப கால உறுபபினர் என்றும கருணாவின் கட்சி தொடர்பில் செயற்பட்டவர் என்றும் தெரியவந்துள்ளது. (32)

# தமிழீழக் கடற்படையின் விசேட அணிவகுப்புடன் முல்லையில் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பம்!



கடற்கரும்புலி படையணி, சாள்ஸ், (நளாயினி) படையணி சிறப்புப்படையணி ஆகிய படையணிகள் இணைந்து வழங்கிய தமிழீழ கடற்படையின் விசேட அணி வகுப்புடன் முல்லை நகரில் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகியன.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் கடற்கரும்புலிகள், சாள்ஸ், (நளாயினி) படையணி சிறப்புப் படையணி என்பனவற்றின் விசேட அணி வகுப்பு முல்லை நகரப் பகுதியில் இருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தை வந்தடைந்தது. இதனையடுத்து பொதுசசுடரினை தமிழீழ கடற்படையின் தளபதிகளில் ஒருவரான கண்ணதாசன், ஏற்றி வைத்தார். தமிழீழத தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றினார். அடுத்து தாயக மீட்புப் போரில் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் திருவுருவப்படங்கள் அடங்கிய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் உருவப்படத்திற்கு கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியாசா மற்றும் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மேற்பட நிகழ்வு கடற்படையின் மகளிர் தளபதிகளில் ஒருவரான அறிவழகி தலைமையில் நடைபெறறது.

இதேவேளை, வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலய திலீபன் விளையாட்டு மைதானததில மாவரா நாள் ஆரம்ப நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நேற்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தின் முன்பாக இருந்து கடற்கரும்புலிகள் படையணி சாள்ஸ், (நளாயினி) படையணி, தமிழீழ கடற்படையின் விசே- படையணி ஆகியவற்றின் விசேட அணிவகுப்பு ஆரமபமாகி திலீபன் விளையாடடு மைதானத்தை வந்தடைந்தது. அடுத்து தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றிவைத்தார். அடுத்து தாயக மீட்புப் போரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கரும்புலி மாவீரர்கள், மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர் உறவினர்களால் சுடர் ஏற்றி மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து சிறப்புரையைத் தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் நிகழ்த்தினர். மேற்படி நிகழ்வு வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் குழலவிழி தலைமையில் நடைபெறறது. (லோ, 11, 20)

## தேசியத்....

கற்க முடியாத மாணவருக்கும், பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதில் நிதிச் சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவருக்கும் இந்நிதியத்திலிருந்து காசுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இது பற்றி தமிழீழ நிதித்துறையினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாளையொட்டி கல்வி மேம்பாட்டு நிதியம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். ஆண்டு தோறும் ஒரு கோடி உரூபா இந்நிதியத்திற்கு ஒதுக்கப்படும்.

எம்மால் நடத்தப்படும் தமிழ்மொழித்திறன் தேர்விலும் பொதறிவு மற்றும் உளச்சார்புத் தேர்விலும் சிறந்த பெறுபேறு பெறுவோருக்கு இந்நிதியத்திலிருந்து காசுப் பரிசில்கள் வழங்கப்படும்.

தமிழீழத்தில், க.பொ.த. (சா/த) தரத் தேர்வில் சிறந்த பெறுபேறுகளுடன் தேறி நிதிவாய்ப்பின்மையால் தொடர்ந்து கற்கமுடியாத மாணவருக்கும், பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதில் நிதிச்சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவருக்கும் பின்வரும் பாடங்களைக் கொண்ட கற்கை நெறிகளைக் கற்பதற்கு நிதியுதவி வழங்கப்படும்.க.பொ.த. உயர் தரத்திற் பின்வரும் பாடங்களிற் பொருத்தமான ஏதாவது மூன்று பாடங்கள் இணைந்த கற்கை நெறி.

| | |
|---|---|
| ☐ தமிழ் | ☐ ஆங்கிலம் |
| ☐ இணைந்த கணிதம் | ☐ வேதியல் (இரசாயணம்) |
| ☐ இணைந்த உயிரியல் | ☐ பூதியல் (பௌதீகம்) |
| ☐ புள்ளிவிபரவியல் | ☐ வரலாறு |
| ☐ பொருளியல் | ☐ கணக்கியல் |
| ☐ நிலவியல் (புவியியல்) | ☐ வணிகக்கல்வி |

பல்கலைக்கழகத்தின் பின்வரும் கற்கை நெறிகள்

| | |
|---|---|
| ☐ தமிழ் | ☐ ஆங்கிலம் |
| ☐ மருத்துவம் | ☐ பொறியியல் |
| ☐ வணிகவியல் | ☐ முகாமையம் |
| ☐ பொருளியல் | ☐ நிலவியல் |
| ☐ சட்டம் | ☐ வேளாண்மை |
| ☐ கணிதம் | ☐ வரலாறு |
| ☐ பூதிய அறிவியல் (பௌதீக விஞ்ஞானம்) | |
| ☐ உயிரிய அறிவியல் (உயிரியல் விஞ்ஞானம்) | |
| ☐ கணினி அறிவியல் (கணினி விஞ்ஞானம்) | |

நிதி ஒதுக்கீடானது தமிழ்மொழித்திறன் 25 இலட்சம், பொதறிவும், உளச்சார்பும் 25 இலட்சம், க.பொ.த. உயர்தரக் கல்வி 25 இலட்சம், பல்கலைக்கழகக் கல்வி 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்கல்வி மேம்பாட்டு நிதியத்தில் தமிழீழத்தில் வாழும் அனைத்து இனத்தவரும் பயன்பெறலாம் என நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ. தமிழேந்தி அவர்கள் தெரிவித்தார். (கு.சு)

## தேசியத்....

வித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலய ஆசிரியர் மாணவர்கள், தென்மராட்சி தனியார் கல்வி நிலைய ஒன்றியம், மிருசுவில் றோ.கா. வித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்கள், வடமராட்சி வர்த்தக சங்கம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்கள் மாணவர்கள், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவர்கள், தேவரையாளி இந்துக்கல்லூரி மாணவர்கள், பருத்திதுறை காட்லிக் கல்லூரி மாணவர்கள், கரவெட்டி ஞான சாரியார் கல்லூரி மாணவர்கள், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகள், வல்லை மகளிர் கல்லூரி மாணவிகள், கப்புது ஏகாம்பரம் வித்தியாலய மாணவர்கள், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியால மாணவர்கள், யாழ்.மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியம், தீவக மக்கள் நலன்காப்பகம், யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம், தீவக மக்கள் போராளிகள், கிளிநொச்சி ஊனமுற்றோர் சங்கத்தினர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள், கல்விசார ஊழியர்கள் யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ். மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் யாழ். மாவட்ட மக்களி னால் தேசியத் தலைவருக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களையும் வாழ்த்து மடல்களையும் யாழ். மாவட்ட அரசியல்துறையினராலும், 50 அடி நீளமான தேசியத் தலை வரின் ஆரம்ப நாள் முதல் ஆண்டு ரீதியான நிகழ்வினை சித்தரிக்கும் வாழ்த்துச் செய்தியினை ஓவியர் தீசன், குடும்பத்தினர் கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்த தினமான இன்று தமிழீழமெங்கும் மாபெரும் பொங்கல் நிகழ்வுகளும், பயன்தரு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வுகள் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இன்று காலை 7.00 மணிக்கு கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் பொதுச்சந்தை வர்த்தகர் சங்கத்தினரால் மாபெரும் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. அதேபோன்று விசுவமடு தேசிய எழுச்சிப் பேரவையினதும், கமக்கார அமைப்பினதும் ஒழுங்குபடுத்தலில் தருமபுரம் ஏ1 பாடசாலையிலும் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாடடில் கிளிநொச்சி சேரன் சுவையகம் முன்பாகவும், பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பரந்தன் மத்திய சந்தைப் பகுதியிலும், பளை தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பளை மத்திய பகுதியிலும் மாபெரும் பொங்கல் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

அத்துடன் இன்று வன்னி வேளான் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் ஐயாயிரம் தென்னம் நாற்றுக்கள் சகல கிளை விற்பனை நிலையங்களில் வைத்துவழங்கபடும் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் பழமரக் கன்றுகள் அரியாலை தெற்கு, மத்தி கிராம மக்களுக்கு வழங்கப் படவுள்ளது.

இதனை ஒத்த பல்வேறு நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் நடைபெற ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்...

மாலை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிட பிரயோகத்தில் 2 பொதுமக்கள் காயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள. மாவீரர் பந்தலும் சேதமாக்கப்பட்டது.

வவுனியா கோவில் குளத்தில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தின் போதும் தமிழீழத் தேசியக் கொடி இராணுவத்தினரால் பலவந்தமாக இறக்கப்பட்டது. இதனையடுத்து அங்கும் பதற்ற நிலை தோன்றியது. இதேவேளை மன்னார் பேருந்து நிலையத்திலும் நேற்றுவிடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் தொடர்பான வைபவம் நடைபெற்றபோது அங்கு பதற்ற நிலை தோன்றியது.

பருத்தித்துறை

மன்னாரில் சிறிலங்காப் பொலிசாரும் இராணுவத்தினரும் மாவீரர் தின நிகழ்வில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் மன்னார் நகரப்பொறுப்பாளர் முடியரசன் உட்பட பதினைந்திற்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்துள்ளனர்.

இதனைப் பார்வையிட அவ்விடத்திற்கு விரைந்த வன்னி மாவட்ட தமிழ்த்தேசிய பாராளுமன்ற உறுப்பினர் விேனோநோகராதலிங்கம் மற்றும் தாழ்வுபாடு பங்குத்தந்தையும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். நேற்று நண்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதல்களின் போதுமுதலில் மன்னார் பேருந்து நிலையத்திற்குள் கம்பிகள் தடிகளுடன் அத்துமீறி நுழைந்த சிறிலங்காப் பொலிசாரும் இராணுவத்தினரும் அங்கு அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலை அடித்து உடைத்து தீமூட்டி எரித்ததுடன் மாவீரர் தின நிகழ்விற்காகவும் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்திற்கான ஏற்பாட்டிலும் ஈடுபட்டிருந்த மக்கள் மீதே முதலில் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலினால் மன்னார் நகரபபொறுப்பாளர் முருகேசன் உட்பட மூவர் படு காயமடைந்தனர். இவர் கள் மன்னார் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டனர்.

பின்னர் அங்கிருந்து சென்ற இராணுவத்தினரும் பொலிசாரும் மன்னார் பொது நூல் நிலையத்தின் முன்பாக மாவீரர் தின நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மக்கள் மீதும் தாக்குதலை நடத்தினர்.

இதன் போது 15 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயத்திற்குள்ளாகி மன்னார் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை மக்கள் மீது இராணுவத்தினரும் பொலிசாரும் மேற்கொண்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த வன்னி மாவட்டத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான விேனோநோகராதலிங்கம் மற்றும் தாழ்வு பாடு பங்குத்தந்தையும் இராணுவத்தினராலும் பொலி சாரினாலும் தாக்கப்பட்டனர்.

இதனை அடுத்து கொதிப்படைந்த மக்கள் சிறிலங்காக் கடற்படையினருக்கு உணவுப்பொருட் களை ஏற்றிச்சென்ற வாகனமொன்றை அடித்து நொருக் கிச் சேதமாக்கியுள்ளனர்.

## உணர்வு...

வடமராட்சி பிரதேசத்தில் நெல்லி யடியில் கரும்புலி மில்லர் நினை வாலயத்தில் தேசியக்கொடி ஏற்றலுடன் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

தேசியக் கொடியினை வடமராட்சி மாவீரர் துயிலுமில்ல பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை வடமராட்சி விளையாட்டுப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க ஈகச்சுடரினை நிதித்துறையைச் சேர்ந்த பரா ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வில் பொது ஈகச்சுடரினை போர்ப்பயிற்சி மகளிர் ஆசிரியர் பொறுப்பாளர் அஜந்தி ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியை கேணல் தீபன் அவர்கள் ஏற்றிவைத்தார். அதேபோன்று தமிழீழ அரசியல் துறை நடுவப்பணியகத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வு இடம் பெற்றது. பொது ஈகச்சுடரினை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை கேணல் ரமேஷ் ஏற்றிவைத்தார். வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்திலும் வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தின் பொறுப்பாளர் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியினை லெப். கேணல் குட்டி சிறி மோட்டார் படையணி மகளிர் பொறுப்பாளர் பவநிதி ஏற்றிவைத்தார்.

மாவீரர் தின நிகழ்வுகள் அலம்பில் துயிலும் இல்லத்தில் அலம்பில் பிரதேச பொறுப்பாளர் யாழ்.மன்னன் தலைமையில் இடம் பெற்றது. பொதுச்சுடரினை அளம்பில் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் திகள்விழி ஏற்றினார். தேசியக் கொடியினை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் ம.ரங்கன் ஏற்றினார். அத்தோடு ஜீவன் துயிலும் இல்லம் மணலாற்றுப் பகுதியில் போராளி யுகன் தலைமையில் இடம் பெற்றது. பொதுச்சுடரினை துணைத்தளபதி கலையழகன் ஏற்றினார். தேசியக்கொடியை தளபதி சித்திராங்கன் ஏற்றினார். அத்தோடு நிகாப் துயிலுமில்லம் மணலாற்றில் போராளி செந்தில் குமரன் தலைமையில் இடம் பெற்றது. பொதுச்சுடரினை போராளி கணேஸ் ஏற்றினார். தேசிய கொடியை படையக தொடக்கப் பயிற்சிக் கல்லூரி நிர்வாகப் பொறுப்பாளர் மெய்யறிவு ஏற்றிவைத்தார்.

தமிழீழ காவல் துறையினரின் சிறப்புப் படையணியினரின் மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வு விளக்கு வைத்த குளம் பகுதியில் ஆரம்பமாகின.

தேசியக் கொடியினை தமிழீழ காவல் துறை சிறப்புப் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் லலித் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை வவுனியா வடக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீப் ஏற்றி வைத்தார். கிளிநொச்சி காவல்துறை நடுவப் பணியகத்தில் நேற்று மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன. நடுவப்பணியகக் கண்காணிப்பாளர் சி.மாதவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த பரிசோதகர் பொ.பவானி அவர்கள் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை காவல்துறை குற்றத்தடுப்புப் பிரிவு கண்காணிப்பாளர் பா.இயலரசன் அவர்கள் ஏற்றிவைத்தார்.(20,45,கா,33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.